# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU
(சாட்சிக்கு திரு.E.ஜெயவேல், தலைமை எழுத்தர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | | |
|---|---|---|
| Sessions | : | SC.No.203/2021 |
| Deposition of Witness for | : | PW.10 |
| Name | : | திரு.பால் சதீஷ்குமார் |
| Father's Name | : | திரு.ஜோசப் செல்வராஜ் |
| Taluk/Address | : | எண்.8, ரைட்டர் சபாபதி தெரு, செங்கல்பட்டு |
| Age | : | 50 |
| Date | : | 30.07.2026. |

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் மியூசிக் டீச்சராக உள்ளேன். வழக்கு சம்பவம் நடந்த போது நான் வீட்டில் இல்லை. கடந்த 2012ம் வருடம் ஒரு நாள் மாலை 5 மணிக்கு தான் என்னுடைய வீட்டிற்கு நான் வந்தேன். தெருவெல்லாம் ஒரே பரபரப்பாக இருந்தது. என் வீட்டில் என் மனைவி எதிர் வீட்டில் ஏதோ மரணம் நடந்து விட்டது என்று என்னிடம் சொன்னார். அதன் பிறகு நான் வீட்டிலேயே இருந்து விட்டேன். அடுத்த நாள் 2 போலீசார் வந்தார்கள். கடைக்கு போய் விட்டு நான் வந்துக் கொண்டிருந்தேன். வீட்டு வாசலில் வைத்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் எல்லாம் போட மாட்டேன் என்று சொன்னேன். நான் அந்த இடத்திற்கு வந்ததற்கு சாட்சி வேண்டும் என்று கேட்டதன் அடிப்படையில் எதிர்வீட்டுக்காரர் கையொப்பம் போட்டார், நானும் கையொப்பம் போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் **அ.சா.ஆ.6.** என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் **அ.சா.ஆ.7.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி இந்த நீதிமன்றத்தில் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

கடந்த 06.01.2011ம் தேதி சுமார் 3.00 மணிக்கு நான் வீட்டிலிருந்த போது எதிரே உள்ள சந்திரபாய் வீட்டின் முதல் மாடியில் வரதனின் வீட்டில் சத்தம் கேட்டது என்று போலீசார்

விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும், அக்கம் பக்கத்தினரும் ஓடி சென்று பார்த்தபோது செங்கல்பட்டு நகரமன்ற துணை தலைவர் ரவிபிரகாஷ் பின் தலையில் பலத்த வெட்டு காயத்துடன் கவிழ்ந்து இறந்து கிடந்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர் வெள்ளை கலரில் அரைக்கை சட்டை, பேண்ட் ஆகியவை அணிந்திருந்தார் என்றும், துணிகளும், பிரேதமும் கிடந்த இடத்தில் ரத்தம் படிந்திருந்தது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. பிரேதத்தின் அருகில் வரதனும், ரவிபிரகாஷின் தம்பி செந்தில்பிரகாஷும், அவர்களுடைய நண்பர்களும் அழுதுக் கொண்டிருந்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அப்பொழுது அங்கு பட்ரவாக்கம் சிவா என்பவர் சுமார் 10 க்கும் மேற்பட்டவர்களுடன் வந்து அசிங்கமாக திட்டி, கத்தியால் வெட்டி ரவிபிரகாஷை கொலை செய்து விட்டு கருப்புநிற பொலிரோ காரில் தப்பி சென்றுவிட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு போட்டோ எடுத்து கொண்டு பிரேதத்தை மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. அன்றிரவு 7.45 மணிக்கு சம்பவ இடம் வந்த போலீசார் என்னிடமும், சிவகுமாரிடமும் சம்பவ இடத்தை பார்வையிட்டு குறிப்புகளில் விவரங்களை எழுதி பார்வை மகசர் தயார் செய்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த மகசரில் இருவரும் கையொப்பம் போட்டு கொடுத்தோம் என்றும், மேற்படி இடத்தில் 8.45 மணிக்கு ரத்தக்கறை படிந்த ஒரு செருப்பு, ரத்தக்கறை படிந்த சட்டை, பிளாஸ்டிக் காலி ஒரு லிட்டர் பாட்டில், ரத்தக்கறை படிந்த சிமெண்ட் தரை மண், ரத்தக்கறை படியாத சிமெண்ட் தரை மண் ஆகியவற்றை மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதில் சாட்சிகளாக கையொப்பம் போட்டு கொடுத்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை